திருகோணமலை நகர சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 18 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 மற்றும் 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நகரசபையின் பொதுக் களஞ்சியத்தில் உள்ள காகிதாதிகள், நீர் இணைப்பு பொருட்கள், வேலை பகுதிக்கான பொருட்கள், தெரு விளக்கு பொருத்துக்கள் மற்றும் வாகன எரிபொருட்கள் உள்ளடங்கலான மீளாய்வாண்டின் இறுதியில் இருப்புக்கள் ரூபா 14,481,643 தொகையாக காணப்பட்ட போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பொருள் இருப்பு ரூபா 2,395,798 தொகையாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியான தொகையை கணக்கில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட களஞ்சிய இருப்பு பெறுமதியினுள் தவறுதலாக வாகனங்களின் திருத்தச் செலவினம் ரூபா 1.5 மில்லியன் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆகவே குறிப்பிட்ட சேவை பெறுமதிகள் களஞ்சிய பெறுமதியினை அதிகரித்து காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொருள் பெறுகைக்கான கொடுப்பனவின் போது மட்டுமே இருப்பாக கணிக்கும் நடைமுறை காணப்படுகிறது. குறித்த தவறுகள் தற்பொழுது திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபையின் கீழ் உள்ள ஆயுள் வேத வைத்திய சாலையின் மருந்துப் பொருட்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள இருப்பு ரூபா 223,098 தொகை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத இருப்புக்களைக் கணக்குகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த ஆயுர்வேத மருந்துகளை இருப்பு பெறுமதியினுள் இனிவரும் காலங்களில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதிவரை சபையின் பாவனையில் உள்ள 52 மோட்டார் வண்டிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதியைக் கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அநேக வாகனங்கள் நன்கொடை மூலம் சபைக்கு கிடைக்கப் பெற்றதாக இருப்பதனால் அச்சமயம் நன்கொடையாளர்களால் அவற்றின் பெறுமதி குறிப்பிடப்படவில்லை. எனினும் இது ஒரு கணக்கீட்டு தவறு என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (iv) | பதவியணியினருக்கான கடன் பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவைகள் மீதி ரூபா 21,316,765 இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 20,587,220 தொகை காட்டப்பட்டிருந்தது. | சரியான தொகையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த ரூபா. 729,545 தொகையானது தொடர்ச்சியாக 2010 ஆம் ஆண்டிலிருந்து இறுதிக்கணக்கறிக்கையில் காட்டப்பட்டு வருகின்றது. கடன்பட்டோர் இடமாற்றம் பெற்றுச் சென்ற, இளைப்பாறிய அல்லது இறந்த உத்தியோகத்தர்களாக காணப்படுவதுடன் தற்போது மேற்படி தொகையுடன் கடன்பட்டோரின் தனிநபர் மீதிகள் சமன் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட பட்டியல் சபைக்கு சமர்ப்பித்து குறித்த தொகையினை பதிவழிப்பதற்கோ அல்லது விட்டுவிடுவதற்கோ அல்லது அறவிடுவதற்கோ உரிய அனுமதியினை பெறுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| (v) | மீளாய்வாண்டின் நிலையான வைப்புக்கள் தொடர்பில் பெறப்பட்ட வட்டி ரூபா 1,196,248 வருமான செலவுக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை வருமானச் செலவுக் கணக்கில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது இனிவரும் காலங்களில் நிலையான வைப்புகளிற்காக பெறப்பட்ட வட்டித்தொகையானது வருமான செலவு கணக்கிற்கு கொண்டுவரப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | சபைக்கு சொந்தமாக உள்ள 39 கட்டிடங்கள் மற்றும் 05 காணிகள் தொடர்பில் அவற்றின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடுகளை மேற்கொண்டு காணி கட்டிடங்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | குறித்த சொத்து மீள்மதிப்பு தொடர்பாக விலைமதிப்புத் திணைக்களத்தினரிடம் சொத்து மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது தற்காலிக மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளும் பொருட்டு இரு உத்தியோகத்தர்களை தற்காலிகமாக நியமனம் செய்து மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| (vii) | மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்கிடப்பட்ட முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 18,662,906 தொகையாக கணக்குகளில் காட்டப் பட்டுள்ளபோதிலும், நகர சபையினால் கிடைக்கபெற்ற ஆவணங்களின் படி மீளாய்வாண்டின் இறுதி வரைக்குமாக கணக்கிடப்பட்ட முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 26,434,310 தொகை உள்ளது. இதன் படி ரூபா 7,771,404 தொகை குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | சரியான தொகையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிப்பதிவாளர் திணைக்களத்திலிருந்து எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான நிலுவை விபரம் அடங்கிய ஆவணத்தில் ரூபா. 26,434,310 என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண இறைவரித் திணைக்களம் செவ்வை பார்க்கையில் பல செயற்பாடுகளின் அடிப்படையில் சில தொகைகளினை நீக்கும் இதனால் தேறிய முத்திரை கட்டண தொகையினை மாகாண திறைசேரியிடம் உறுதிப்படுத்திய பின்னரே இறுதி கணக்குகளிற்கு கொண்டுவரும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. |

(ஆ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள மின்சாரக் சபை கையளிப்பு ரூபா 5,010,261 தொகை, வேலைகள் மீதான அறவீட்டு நிலுவை ரூபா 108,005 தொகை ஆகியவை தொடர்பில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறுதிக் கணக்குகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பெற வேண்டியவையாக காட்டப்படும் பின்வரும் மின்சார கையளிப்பு ரூபா 5,010,261, வேலைகள் மீதான அறவீட்டு நிலுவை ரூபா 108,005 என்பவற்றை கண்டறியும் பொருட்டு உள்@ராட்சி ஆணையாளரினால் உள்@ராட்சி நிதி விடயங்களில் நிபுணத்துவம் மிக்க குழு ஒன்றினை நியமித்து அதன் அறிக்கையின் படி சபையினால் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 134,734,923 பெறுமதிக்கு தேவையான ஆதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலையான சொத்து பதிவேட்டில் சபைக்கு சொந்தமான காணி கட்டிடம் உள்ளடக்கப்பட்டது இருந்தாலும் ஏனைய காணி கட்டிடம் தொடர்பான ஆவணங்கள் பிரதேச செயலகப் பிரிவில் அனுப்பப்பட்டுள்ளது. காணி உறுதி இன்னும் பெறப்படவில்லை. |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| அ) ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகள்<br>------<br>நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 177(2) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களின் பொழிப்பு ஒவ்வொரு நிதியாண்டினதும் மார்ச் 01 அல்லது அதற்கு முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் முன்னைய ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் சபையினால் பிரசுரிக்கப்படவில்லை. | பொழிப்பு ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் 01 அல்லது அதற்கு முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது இனிவரும் காலங்களில் மேற்படி நடைமுறை கண்டிப்பாக பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஆ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>------<br>i. XIX ஆம் அத்தியாயத்தின் | அரச விடுதிகளை அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், 05 விடுதிகள் அரச உத்தியோகத்தர்கள் இல்லாத தனியாரின் | சபையின் விடுதிகளை திருத்த நடவடிக்கை எடுத்து அதை உரிய உத்தியோகத்தர்க | நகரசபையின் சுகாதார தொழிலாளர்களுக்கான விடுதிகளே வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விடுதிகள் பழமையான |

| | | | |
|---|---|---|---|
| 6.2 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | பாவனைக்காக மீளாய்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது. | ளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டடங்களாகவும் அத்தியாவசிய வசதிகள் (நீர், மின்இணைப்பு, மலசலகூடம்) அற்ற விடுதிகளாகவும் காணப்படுகிறது8. எனினும் இவ்விடுதியில் வசிப்பவர்களை மீள விடுதியைக்கையளிக்குமாறு கடிதமும் அனுப்பியுள்ளோம். இவ்விடுதிகள் தற்போது இடித்து புதிய மாடித்தொடர் விடுதிகள் அமைக்கப்பட சபையில் 2020.06.16 ஆம் திகதி முடிவெடுக்கப் பட்டுள்ளது. மேலும் புதிய அந்தோனியார் வீதியில் அமைந்துள்ள விடுதியானது ஆளுனர் memorandum மூலம் மாகாணசபைக்கு வாடகை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. |
| இ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| i. நிதிப்பிரமாணம் 571 | • 03 தொடக்கம் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 12,062,083 தொகையான கேள்வி, ஒப்பந்த வைப்புக்கள் நூலக வைப்புக்கள் நானாவித மற்றும் நீர் அணைப்பு வைப்புக்கள் நிதிப்பிர மாணத்திற்கு அமைய கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குத்தகைதாரர்களால் வைப்பில் இடப்பட்ட தொகைகள் பொதுவைப்புக் கணக்கில் பெருமளவில் காணப்படுகின்றது. தொடர்ந்து அக் கடைகளை அக் குத்தகைகாரர்களே நடாத்தி வருவதால் அத்தொகை தொடர்ந்தும் எமது வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது. அவற்றை மீளளிப்பு∴ சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நிதிப்பிரமாணம் 371(3) | சபையின் உத்தியோகத்தர்களுக்கும் தனி நபர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 608,584 முற்பணத்தை தீர்வு செய்வதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | முற்பணங்கள்உரிய முறையில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா.608,584 முற்பண தொகை தொடர்பில் வெகுவிரைவில் சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

---------------------

| | | | | |
|---|---|---|---|---|
| i. | 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய 9/2009 இலக்கம் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை பிரிவு 02(iv) | நேரத்தின் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையில் கடமை புரியும் 03 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 236,162 பெறுமதியான கொடுப்பனவுகள் விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்று நிருபத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏலவே மத்திய வேலைத்தள (லுயசன) பகுதியில் விரல் அடையாளப்பதிவிடும் பொருட்டு ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களே இவர்கள் குறித்த இயந்திரத்தினை பயன்படுத்தாமைக்கான காரணமாகும். |

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 89,963,948 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,434,872 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

--------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரியும் வரியும் | 35,500 | 135,881 | 39,249 | 96,633 | 43,420 | 140,882 | 41,080 | 99,802 |
| வாடகைகள் | 31,800 | 48,180 | 19,018 | 29,162 | 30,707 | 48,097 | 21,129 | 26,968 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,225 | 5,122 | 5,122 | -- | 5,275 | 5,175 | 5,175 | - |
| ஏனைய வருமானம் | 25,124 | 83,067 | 64,404 | 18,663 | 49,663 | 27,960 | 27,624 | 336 |
| மொத்தம் | 98,649 | 272,250 | 127,793 | 144,458 | 129,065 | 222,114 | 95,008 | 127,106 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் ஆதனவரி நிலுவை ரூபா 99,802,932 அறவிடுவதற்காக 05 நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவர்களால் ரூபா 5,990,935 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை மூலம் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது தற்போது நடுக்கட்டு உத்தியோகத்தர்களிற்கு ஆண்டிற்குள் சேகரிக்க வேண்டிய நிலுவை தொகை நிர்ணயிக்கப்பட்டு அறிவுறுத்தல் கடிதங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நிர்ணயிக்கப்பட்ட நிலுவைத் தொகையினை சேகரிக்க தவறும் நடுக்கட்டு உத்தியோகத்தர்களின் நியமனம் இரத்துச்செய்யப்பட்டு புதிய நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதனவரி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வரிகள் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2009 ஆண்டிற்குப் பின்பு இன்று வரை மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்து மதிப்பீடு தொடர்பாக விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை கடிதங்கள் அனுப்பிய போதிலும் பதில் எதுவும் இற்றைவரை கிடைக்கப் பெறவில்லை. எனினும் அண்ணளவான ஒரு தற்காலிக மதிப்பீட்டினை பெறும் பொருட்டு சபை அனுமதியுடன் இரு உத்தியோகத்தர்களை தற்காலிக நியமித்து மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. |

2.2.3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **உல்லாச விடுதிகள் மீதான வருமான வரி** | | |
| நகரசபையின் அதிகார எல்லைக்குள் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட்ட உல்லாச வீடுதிகள் மீதான வருமானவரி தொடர்பில் பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது. | தீர்வையை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது இனிவருங்காலங்களில் இதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (அ) நகரசபைகளின் கட்டளைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படட ஒரு விடுதியகம், உணவுச்சாலை அல்லது உறையகம் என்பவற்றிடமிருந்து தீர்வைகள் பெற கணக்காய்வுத் திகதியான 2020 மே 05 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) நகரசபையின் அதிகார எல்லைக்குள் 03 ஹோட்டல்கள் மீதான தீர்வைகள் 2017 தொடக்கம் 2019 இறுதி வரையான காலப்பகுதிக்கு கணக்கிடப்பட்டு சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக ஹோட்டல்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரி அறவிடுவது தொடர்பாக வருமான பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவற்றினை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) மீளாய்வாண்டில் 04 ஹோட்டல்களின் உரிமையாளர்களின் கடந்த கால நிலுவைகள் முறையாக அறவிடப்படாது வியாபார உரிமைப் பத்திரங்கள் சபையினால் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஹோட்டல் உரிமையாளர்களிடம் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான வியாபார உரிமப்பத்திரமானது வியாபார உரிய வரி செலுத்தப்பட்ட காரணத்தினால் வழங்கப் பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் இவர்களிடமிருந்து 1மூ வரி அறவிட்ட பின்னர் வியாபார உரிமப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) நீதிமன்ற தண்டப்பணம்** | | |
| மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 10,036,458 தொகை நீதிமன்ற தண்டப் பணமானது 2018 ஆகஸ்ட் தொடக்கம் 2019 யூலை வரையான காலப்பகுதிக்குரியதாகும். இருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரைக்குமான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2020 மே 06 ஆம் வரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு யூலை வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்ற தண்டப்பணமானது எம்மால் நேரடியாக சென்று வினவி பெற்றுக் கொள்ளப்பட்டதேயாகும் மிகுதி நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| **(ஆ) முத்திரை தீர்வைகள்** | | |
| (i) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் நகரசபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வை விபரங்கள் பதிவாளர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டு கோரிக்கையானது பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) அவர்களுக்கு எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வை தொடர்பான விபரங்கள் பதிவாளர் திணைக்களத்தில் கோரப்பட்டுள்ளது. இதனை விரைவாக பெற நடவடிக்கை எடுக்கப்படும |
| (ii) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017, 2018 மற்றும் 2019 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலம் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தால் ஆதன உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட மேலதிக முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு சபையினால் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மேலதிக முத்திரைத் தீர்வைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இம் மேலதிக முத்திரைத் தீர்வை தொடர்பாக கோரிக்கைக் கடிதம் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) அவர்களுக்கு எம்மால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித விடயங்களுக்கும் உப விதிகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | மிகுதி உபவிதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதிக்கப்பட்ட உபவிதிகள் மூன்று காணப்படுகின்றன. பத்து விடயங்களிற்கான உபவிதிகள் தயாரிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் ACLG, CLG ஊடாக அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டது. இவை இதுவரை அனுமதிக்கப்பட்டு எமக்கு மீளளிக்கப்படவில்லை. மிகுதி உபவிதிகள் விரைவில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய படிவத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய படிவத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரச விடுதிகள் பாவனை | | |
| (i) 30 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய விடுதி வாடகை ரூபா 324,250 தொகையானது 10 வருடங்களுக்கு மேலாக | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச விடுதிகள் மீதான வாடகை நிலுவைகள் தொடர்பில் நிலுவை பட்டியலில் உள்ளவர்களிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் குறித்த பட்டியலில் காணப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாக காணப்படுகின்ற போதிலும், அவற்றை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மரணமாகிய இருவர் தொடர்பில் சபை தீர்மானத்துடன் பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ii) | நகரசபையின் 08 உத்தியோகத்தருக்கான விடுதிகள் மற்றும் 34 வேலை மற்றும் சுகாதார தொழிலாளர்களுக்கான வீடுதிகள் வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், சபையினால் வாடகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது வழங்கப்படுகின்ற விடுதிகளுக்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. ஆயினும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளாது வசிப்பவர்களிடமிருந்து வசித்து வருகின்ற காலப்பகுதிக்கான கடிதம் பெறப்பட்டு ஒப்பந்தங்கள் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (iii) | நகரசபையின் 04 அரச விடுதிகள் 03 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படதாது உள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேலைத்தொழிலாளர் விடுதி ஒன்றும் சுகாதார தொழிலாளர்களது விடுதிகளும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. |
| (iv) | அரச விடுதிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ள நகர சபையில் பணியாற்றும் 05 உத்தியோகத்தர்களும் 06 சுகாதார தொழிலாளர்களும் மற்றும் 15 வேலைத் தொழிலாளர்களும் விண்ணப்பித்துள்ள போதிலும், 05 வருடங்களுக்கு மேலாக அரச விடுதிகளில் தங்கியுள்ள பணியாளர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாது உள்ளதுடன், புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு விடுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது தற்போது 5 வருடத்திற்கு மேலாக அரச விடுதியில் வசிக்கின்ற அனைவரிற்கும் அதனை காலி செய்வதற்கான அறிவுறுத்தல் கடிதங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நகர சபையின் பணியாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி ரூபா 19,969 தொகை தொடர்பில் பணியாளர்களது ஆவணங்களை இனங்கண்டு அவற்றை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுவருகின்றது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த சேமலாப மீதி தொடர்பானவர்களை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் | | |
| (i) சபையில் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும், அவற்றுக்கு உரிய இலங்கை நிர்வாக சேவை மற்றும் இலங்கை கணக்காளர் சேவையில் உள்ளவர்கள் மீளாய்வாண்டில் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | பதவிகளின் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 28.02.2017 திகதி முதல் செயலாளர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படவில்லை. பாராளுமன்ற கணக்குக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் இந்நியமனம் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வெற்றிடம் தொடர்பில் ஏற்கனவே உரிய மேலதிகாரிகளிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) நகரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளுக்கு அமைய சபையில் 18 வகையான பதவிகளுக்கான ஆளணியினர்களில் 11வகையான பதவிகளில் 37 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சபையின் வெற்றிடமாக உள்ள நாடளாவிய சேவை மற்றும் இணைந்த சேவைகள் தொடர்பில் பிரதிப்பிரதம செயலாளரிற்கும் சபையால் நியமனம் செய்யக்கூடிய ஏனைய வெற்றிடங்கள் தொடர்பில் முதலமைச்சரின் செயலாளரிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மிகையாக 4 தீயணைப்பாளர்கள் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் வேறு எந்த சேவையிலும் மிகை நியமனம் செய்யப்படவில்லை. |
| (ஆ) ஊழியர் கடன்கள் | | |
| 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய ஊழியர்களது கடன் நிலுவை ரூபா 729,545 தொகையாக காட்டப்பட்டு வருகின்ற போதிலும் இத்தொகையை பதிவழிப்பு செய்வதற்கு அல்லது இனங்கண்டு அறவிடு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த கடன் தொகையான ரூபா. 729,545 நீண்ட காலமாக இறுதிக் கணக்குளிற்கும் கடன் பதிவேட்டிற்கும் இடையிலான வேறுபாடாக காணப்படுகிறது. உள்;ராட்சி ஆணையாளரின் அனுசரணையுடன் உள்;ராட்சி சபைகளின் கணக்கு முறைகளில் நிபுணத்துவம் மிக்க குழு ஒன்றினை நியமித்து இவ்வாறான மீதிகளை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

3.4.1 காணிகள் விற்பனை மீதான வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 165d உப பிரிவின் பிரகாரம், “நகரசபை யொன்றின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணி பகிரங்க ஏலவிற்பனை மூலமாகவோ, வேறு வகையிலோ ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் மூலமாக விற்கப்படுகின்றவிடத்து, விற்பனை அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் அத்தகைய காணி விற்பனையின் விற்றுவரவுகளிலிருந்து அத்தகைய விற்றுவரவுத் தொகையின் ஒரு சதவீதத்திற்கு சமனானயொரு வரியினை நகர சபைக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரியாக ரூபா 5,653,900 தொகையும் 2019 ஆம் ஆண்டுக்கான காணிகள் விற்பனை வரியும் கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக சகல சட்டத்தரணிகளுக்கும் எம்மால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் காணிப்பெயர் மாற்றம் செய்வதற்கு சமர்ப்பிக்கப்படும் போது இவ்வரி செலுத்திய காணிகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான 17 வாகனங்கள் 1 முதல் 10 ஆண்டுகள் வரை சபை வளாகத்தில் பயனற்றுக் கிடந்தது அதனை அகற்றுவதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் | பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| ஆ) வைத்தியசாலை கழிவுகளை எரியூட்டும் இயந்திரத்தை பொருத்தும் பொருட்டு ரூபா 5,695,830 தொகையில் 2015 ஆம் ஆண்டில் சபையினால் ஆரம்பிக்கப்பட்டு 2018 அம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்ட இந்நிலையமானது கணக்காய்வுத் திகதியான 2020 மார்ச் 14 ஆம் திகதி வரை பயன்டுத்தப்படாது உள்ளது. | சாத்தியவள ஆய்வுகளை மேற்கொண்ட பின்பு தான் இது போன்ற திட்டங்களை ஆரம்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த இயந்திரம் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை பொது வைத்தியசாலை கழிவுகளை எரியூட்டும் பொருட்டு நிறுவ தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும் எனினும் 2018 ஆம் ஆண்டு குறித்த வேலைகள் பூர்த்தி ஆக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலை வளாகத்தினுள் பிறிதொரு கழிவு எரியூட்டும் இயந்திரம் நிறுவப்பட்டமையால் சபையால் பொது மயாணப்பகுதியில் நிறுவப்பட்ட இயந்திரத்தை கையேற்பதற்கோ பாவிப்பதற்கோ வைத்தியசாலை முன்வரவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு வேலைகளிற்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் பெறுகை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டதன் காரணமாக அதற்கு பதிலாக பிறிதொரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது. | காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டம் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் குறித்த காலாண்டிற்கானவை சரியான நேரத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |